


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




## THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3 : 16

மரம் 1 மார்ச் 2001 கனி 4

ஆசிரியர்
B. அர்ஜுனன்



நாகர்கோவில் பகுதியில் ஜனவரி மாதம் நடைபெற்ற
முதலாவது வாசகர் கருத்தரங்கம்

**இதழின் உள்ளே . . .** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | நாம் எதற்காக தேவனை தொழுது கொள்கிறோம் | 1 |
| 2. | வெட்கப்படாதிருங்கள் | 5 |
| 3. | பொது அறிவுக் களஞ்சியம் | 8 |
| 4. | தெரிந்து கொள்ளுங்கள் | 9 |
| 5. | ஒரு வழி பாடம் | 11 |
| 6. | சிறுவர் பகுதி | 17 |
| 7. | உங்களுடைய ஊழியம் எப்படிப்பட்டது? | 18 |
| 8. | படங்களும் சுருக்கமான வர்ணனைகளும் | 19 |
| 9. | புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | 20 |
| 10. | இம்மாத வேத அறிவுப் போட்டி | |


FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 1 மார்ச் 2001 கனி 4

ஆசிரியருரை

## நாம் எதற்காக தேவனை தொழுது கொள்கிறோம்?

## *Why do we worship God?*



**நா**ம் எதற்காக தேவனை தொழுது கொள்கிறோம் என்ற கேள்வி நம் எல்லோருடைய மனதிலும் எழும்பக்கூடிய ஒன்றாயிருக்கிறது. இதற்கான விடையை பரிசுத்த வேதாகமம் மிக தெளிவாக நமக்கு விளக்கிக் காட்டுகிறது. மனிதனுடைய கருத்துக்களை கண்ணோக்கு வோமேயானால் பலர் பலவிதமான கருத்துக்களை கொடுப்பார்கள். அவையெல்லாம் ஒருவேளை கேட்பதற்கு நலமாக இருக்கும். ஆனால் அது உண்மைக்கு புறம்பானதே. தேவனுடைய தன்மையையும் அவருடைய விருப்பத்தையும் நமக்கு வெளிப்படுத்தியவர் இயேசு கிறிஸ்து ஒருவரே அவரே தேவனிடமிருந்து வந்தவர், "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே (இயேசுவே) அவரை வெளிப்படுத்தினார்" (யோவா. *1:18*).. "தம்மைத் தொழுது கொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" (யோவா. *4:23, 24*), இவ்விதமாக நீங்கள் தேவனை தொழுது கொள்ளுகிறீர்களா?

**அவர் நமது சிருஷ்டிகர்** இந்த உலகத்திலே நாம் காண்கின்ற எல்லாவற்றையும் தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்தார் என பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கின்றோம். இவை எல்லாவற்றையும் ஆண்டு கொள்ளும்படியாக "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார் அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்" (ஆதி. *1:27*) என இவ்வசனம் கூறுகிறது. நாம் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால் நம்மை மற்ற ஜீவசந்துக்கள் ஆண்டுகொள்வதில்லை. நாம்தான் அவைகளை ஆண்டு கொண்டு வருகிறோம். இது தேவனுடைய நியதியாகவும் இருக்கிறது. இப்படிப்பட்டதான அதிகாரத்தையும், வல்லமையையும் கொடுத்த நம் தேவனை ஆராதிக்கவேண்டியது எவ்வளவு அவசியம்.

அநேகர் தாய் தகப்பன்தான் நமக்கு முதல் கடவுள் அவர்கள் தான் நம்மை பெற்றார்கள் என்று வாதிடுவர். உண்மைதான் அவர்கள்தான் நம்மை பெற்றார்கள். அவர்களை பெற்றது யார்? என்று

கேட்டுகொண்டே போவோமேயானால், முதல் மனிதனாகிய ஆதாமை சிருஷ்டித்தவர் தேவனே என்ற முடிவுக்கு வருவோம். தேவனாகிய கர்த்தர் 10 கட்டளைகளை மோசேக்கு கொடுக்கும்போது அதில் ஐந்தாவது கட்டளையில் "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத். 20:12) என்ற கட்டளையை கொடுத்தார். தகப்பனையும் தாயையும் கனம் பண்ணவேண்டும் என்ற போதனையை கொடுத்தாரே தவிர அவர்களை நமஸ்கரிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மேலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல, மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத் 10:37) என்றார். அப்படியிருக்கும் போது நாம் தேவனுக்கு முன்பாக தாய் தகப்பனையோ அல்லது பிள்ளைகளையோ மேன்மைப்படுத்தி நேசிக்கவோ, அவர்களை தொழுது கொள்ளவோ செய்வோமென்றால் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களாயிருப்போம். சிருஷ்டிகரை தொழுதுசேவியாமல் சிருஷ்டிப்புகளை சேவிக்கிறவர்களாயிருப்போம்.

மேலும் நாம் எதற்காக தேவனை தொழுது கொள்ள வேண்டுமென்றால்? **அவர் நம்மை பாவத்திலிருந்து மீட்பவர்** மனிதன் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டும் கீழ்ப்படியாமையினால் பாவத்திற்கு அடிமையானான். அவனை பாவத்திலிருந்து மீட்கவே தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து வெளிப்பட்டார். "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோ. 1:15) என்கிறார் பவுல். உலகத்திலே இருக்கிறதான எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையை அற்றவர்களானார்கள். ஏனென்றால், ஆதாமுடைய கீழ்படியாமையினாலே எல்லோரும் பாவிகளானோம். பாவமில்லாத ஒருவர் இவ்வுலகத்திலிருந்து நம்மை மீட்கவேண்டும் அதற்காகத் தான் இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனாக இவ்வுலகத்திலே அவதரித்தார். "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை (யோவா 1:10). இந்த ஆண்டவராகிய இயேசுவை இன்றும் மானிட வர்க்கம் ஒரு மதபோதகராகவே கருதுகிறது.

"அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக். 13:3) என்றார் இயேசு. நாம் மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசுவை உலகஇரட்சகராக ஏற்றுக் கொள்ளும் போது மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் அடைய முடியும். "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி நீ எழுந்து உன்படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்கும் போ என்றார்" (லூக். 9:6). அதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை

மகிமைப்படுத்தினார்கள். அதைப்போல கிறிஸ்துவின் மூலமாக பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்ற, பெறப்போகிற நாமும் தேவனை தொழுது கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அவர் நம் பாவங்களை மன்னிப்பவர் மட்டுமல்ல, **நம் தேவைகளை சந்திப்பவருங்கூட**. "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திக்கும்போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத் 7:7-11). ஆம் பிரியமானவர்களே! நம் பிள்ளைகளுக்கு நாம் எப்படி இறங்குகிறமோ அதைப் பார்க்கிலும் நம்முடைய பரமபிதாவாகிய தேவன் நம்யாவருக்கும் இரக்கம் செய்கிறவராயிருக்கிறார். ஆதியிலே மனிதனுக்கு வேண்டி அனைத்தையும் பூமியிலே முளைக்கப்பண்ணிய, தேவனுடைய வார்த்தைக்கு இயற்கை தாவரங்கள் கட்டுப்பட்டு, இன்று வரை மனிதனுக்கு பலன்கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. இவையாவையும் படைத்த தேவனை தொழுது கொள்ள வேண்டுமல்லவா?

ஒரு முறை இயேசு தம்மை பின்பற்றி வந்த திரளான ஜனங்களை கண்டு இவர்களுக்காக பரிதபிக்கின்றேன். "இவர்கள் என்னிடத்தில் மூன்றுநாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களைப்பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை. வழியில் சோர்ந்து போவார்களே" (மத். 15:32) என்று சொல்லி, அவர்களுக்கு திருப்தியான உணவுகளை கொடுத்து அனுப்பியதை வாசிக்கின்றோம். அன்றுமட்டுமல்ல இன்றும் என்றும் நம்மை போஷிக்கக்கூடிய வராயிருக்கிறார். "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினி யாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவு படாது (சங். 34:10) என்று தாவீது ராஜா பாடி உள்ளார். சிங்கம் காட்டிலே ராஜாவாக கருதப்படுகிறது. அதனுடைய குட்டிகள் கூட தாழ்ச்சியடைந்து பட்டினியாய் இருக்கும் ஆனால் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு குறையும் இல்லை. "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிறலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?" (மத். 6:26) என நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறுகிறார். அன்பானவர்களே, பூமியில் உள்ளவைகளையும் ஆகாயத்து பட்சிகளையும் போஷிக்கிறவர் கர்த்தர் ஒருவரே. ஆகையால் இவையாவும் கர்த்தரை நன்றியோடு

ஒவ்வொரு நாளும் துதிக்கிறது. அதைப்போல நாமும் கர்த்தரால் போஷிக்கப்படுகிறோம். எனவே நாமும் தேவனை தொழுது கொள்ள வேண்டாமா?

**அவர் நம்மை நித்திய நித்தியமாக காக்கும் தேவன்.** மனிதனை தேவன் நல்நோக்கத்தோடு சிருஷ்டித்தார். ஆனால் மனிதனோ பாவத்திற்கு அடிமையாகி தேவ சமுகத்திலிருந்து விலக்கப்பட்டான். அவனை மீண்டும் தேவன் நேசித்து, பாவத்திலிருந்து மீட்டு போஷித்து வருகிறார். அது மட்டுமல்ல அவனை தம்மோடு நித்திய நித்திய காலமாக வைத்துக் கொள்ளும்படியாகவும் திட்டமிட்டுள்ளார். ஆகையால் தான் இயேசு "நான் ஜெயங் கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வெளி. 3:21) என்கிறார். அவர் மரித்து உயிர்ந்தெழுந்ததைப் போல நாமும் உயிர்த்து நித்திய ராஜ்யத்தில் பிரவேசிப்போம்.

யோவானுடைய தரிசனத்தில் மூப்பர்களில் ஒருவன் "வெள்ளை அங்கிகளைத்தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான் : ஆண்டவரே அது உமக்கே தெரியும் என்றேன்; அப்பொழுது அவன் : இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுகுட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்தது. இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள் சிங்காசத்தின் மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவது மில்லை இனி தாகமடைவதுமில்லை. வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை" (வெளி 7:13-16) என்றான். இப்படிப்பட்டதான நிலையான ஆசீர்வாதத்தை பெறப்போகிற நாம் இவ்வுலகத்திலே கொஞ்சகாலம் பாடு அனுபவிக்கிறவர்களாயிருக்கிறோம். இப்படிப்பட்டதான பாடுகளோடு தேவனை தொழுது கொள்வோம். "அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1 பேது. 4:13).

நாம் எதற்காக தேவனை தொழுது கொள்கிறோம்? என்ற கேள்விக்கு இச்செய்தியின் மூலம் சரியான பதிலை வேதாகமத்தின் துணை கொண்டு பார்த்தோம். இதை நீங்கள் பற்றிக் கொண்டு உலக ஞானத்தையும், ஆலோசனைகளையும் புறப்பாக்கி விட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் வளர்ச்சியடையத்தக்கதாய் கலங்கமில்லாத ஞானப்பாலாகிய வசனத்தின் மேல் வாஞ்சையாயிருங்கள். அவர் நம்முடைய சிருஷ்டிகர் அவர் நம்மை பாவத்திலிருந்து மீட்டவர், அவர் நம் தேவைகளை சந்திப்பவர், அவர் நம்மை நித்தியத்திலே அவரோடு வைத்துக் கொள்வார். இப்படிப்பட்டதான மெய் தேவனை தொழுது கொண்டு, மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அடைவோமாக!



# வெட்கப்படாதிருங்கள்
# Don't Be Ashamed

*J.C. Choate*

கிறிஸ்துவின் நற்செய்தியைக் குறித்து பலர் வெட்கப்படுகின்றனர். தேவனை விசுவாசிப்பவர்கள் என்றும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்றும் பிறர் அறிந்து விடுவார்களே என வெட்கப்படுகின்றனர். சபையைப் பற்றி அவர்கள் வெட்கப் படுகின்றனர். நமது கர்த்தரின் இரத்தத்தால் கிரையம் கொள்ளப்பட்டு கழுவப்பட்ட ஒரே ஒரு சபை இது தான் என அறிவிக்க வெட்கப்படுகிறார்கள். தவறுகளுக்கு எதிராகத் தைரியமாகப் பேசவும், சத்தியத்திற்காக தலை நிமிர்ந்து நிற்கவும் தயங்குகின்றனர்.

இவ்வாறாக மக்கள் ஏன் வாயடைத்துப் போகின்றனர்? ஏனென்றால், இந்த உலகத்தை அவர்கள் நேசிக்கின்றனர். பெரும்பான்மையான உலக மக்களோடும் மத உலகத்திலும் வாழ அவர்கள் விரும்புகின்றனர். எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் பிரபலமானவர்களாக இருக்க அவர்கள் விரும்புகிறார்கள். குறுகிய மனதுடையவர்களாக கருதப்படவும் சிறுபான்மையினரோடு ஐக்கியம் வைத்துக்கொள்ளவும் விரும்பவில்லை. மேலும் கிறிஸ்துவைப் பிறருக்கு அறிவிப்பதைத் தவிர்த்து, தங்கள் நண்பர்கள், அண்டை வீட்டுக்காரர்கள், கிறிஸ்தவரல்லாத குடும்ப அங்கத்தினர்கள் ஆகியரோடு கூடிக்குலாவி, பிறரின் கடினப்பார்வையிலிருந்து தப்ப விரும்புகிறார்கள். தாங்கள் கர்த்தரை மறுதலிப்பதைவிட மரணத்தைத் தழுவவிரும்பிய ஆதி கிறிஸ்தவர்களின் நிலைக்கு முற்றிலும் எதிராக அவர்கள் நிலை உள்ளது. "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரமாக எண்ணப்பட்டபடியினால், அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர் (அப். 5:41).

அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார். "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" (ரோமர் 1:16, 17).

"இதோ இடறுதற்கான கல்லையும் தவறுதற்கான கன்மலையையும் சியோனில் வைக்கிறேன்; அவரிடத்தில்

விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று" (ரோமர் 9:33) என்று நாம் படிக்கிறோம். மீண்டுமாக, "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது". (ரோமர் 10:11)

"நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப் போகாமல், எப்பொழுதும் போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்" என பவுல் அறிவித்தார் (பிலிப். 1:20).

பவுல் தொடர்ந்து கூறும் போது, "ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது **நீ வெட்கப்படாமல்,** தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடே கூட தீங்கநுபவி. அவர் நம்முடைய கிரியைகளின் படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின் படியும், ஆதி கால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்.

அதற்கு நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதியாருக்குப் போதகனாகவும் நியமிக்கப்பட்டேன். அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை, ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறார் என்று நிச்சயித்துமிருக்கிறேன்." ( 2தீமோத்தேயு 1:8-12)

மீண்டும் பவுல் சொன்னார், "**நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும்** சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோத்தேயு 2:15). தேவனைப் பற்றியும் அவருடைய பிள்ளைகளைப் பற்றியும் பேசும்போது, எபிரேய எழுத்தர் சொன்னார். "ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. எப்படியெனில், பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள். இதினிமித்தம் **அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்** உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு

அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும் . . . சொல்லியிருக்கிறார்" (எபிரேயர் 2:10-12). தொடர்ந்து அவர் சொல்லுகிறார். "அதையல்ல அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள். **தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை;** அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே" (எபிரேயர் 11:16).

"**கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள்** உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் **வெட்கப்படும்படிக்கு** நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும். ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று பேதுரு எழுதினார் (1 பேதுரு 3:16-18). அவர் தொடர்ந்து சொல்லுகிறார். "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன்" (1 பேதுரு 4:15, 16).

கிறிஸ்து சொன்னார் "மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனிதர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத்தேயு 10:32, 33) அவர் மேலும் கூறும் போது, "ஆதலால் விபச்சாரமும் பாவமும் உள்ள இந்த சந்ததியில் **என்னைக் குறித்தும்** என் வார்த்தைகளைக் குறித்தும் **எவன் வெட்கப்படுவானோ,** அவனைக் குறித்து **மனித குமாரனும்** தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடே கூட வரும் போது **வெட்கப்படுவார்** என்றார்." (மாற்கு 8:38).


என் நண்பரே, கர்த்தருக்கு முன்பாக நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்?

- ❖ நீங்கள் அவரை **விசுவாசிக்கிறீர்களா?** (எபிரேயர் 11:6 யோவான் 14:1) அல்லது அவரைப் புறக்கணிக்கிறீர்களா?
- ❖ நீங்கள் **விசுவாசித்து இரட்சிக்கப்படும்** பொருட்டு **திருமுழுக்குப்** பெறுவீர்களா? (மாற்கு 16:16) அல்லது மனிதர்களின் உபதேசங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா?


- நீங்கள் **கர்த்தரின் சபையிலே** ஒரு அங்கத்தினரா? (மத்தேயு 16:18) அல்லது மனிதனால் தொடங்கப்பட்ட ஒரு நாமகரன சபையில் பங்கு வகிக்கிறீர்களா?
- நீங்கள் **கிறிஸ்துவின்** பெயரைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களா? (அப். 4:12), அல்லது மனிதன் உண்டாக்கிய பெயரை தரித்திருக்கிறீர்களா?
- நினைவிருக்கட்டும் கடைசி நாளில் கர்த்தருடைய வசனமே நம்மை நியாந்தீர்க்கும். (யோவான் 12:48)

தயவுசெய்து கிறிஸ்துவையும் அவருடைய கற்பனைகளையும் புறக்கணித்து விடாதீர்கள். அவரைப்பற்றி வெட்கப்படாதீர்கள். அவரில் விசுவாசமாக இருங்கள், அவருக்குக் கீழ்ப்படியுங்கள் அவருக்காக ஜீவியுங்கள், ஒரு நாள் அவர் உங்களை சொந்தமாக ஏற்றுக் கொண்டு, பரலோகத்திலே நித்திய வாசஸ்தலத்தை அளிப்பார்.

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்**



## பொது அறிவுக் களஞ்சியம்



### ஐக்கிய நாடுகள் நிறுவனம்

ஐக்கிய நாடுகள் நிறுவனம் 1945ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24ம் நாள் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் 51 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். தற்போது 188 உறுப்பினர்கள் உள்ளனர். தொடக்க 51 உறுப்பினர்களில் இந்தியாவும் ஒரு அங்கத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் சாசம் 111 விதிகளைக் கொண்டது.

இதன் தலைமையகம் நியூயார்க்கில் உள்ளது. ஐக்கியநாடுகளின் கொடி வெளிர்நீல நிறமாகும். இதில் வளைவான ஆலிவ் மரக்கிளைகளுக்கு இடையில் உலகப்படம் பொறிக்கப்பட்டிருக்கும்.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அலுவலக மொழிகள் ஆறு. அவை ஆங்கிலம், பிரெஞ்சு, சீனமொழி, ரஷ்யமொழி, அரபி மற்றும் ஸ்பானிஷ் மொழிகள்.

**ஐ. நா. நிறுவனத்தின் நோக்கங்கள்**

- உலகத்தில் அமைதியையும், பாதுகாப்பையும், நிலைநாட்டுவது
- அனைத்து நாடுகளுக்கிடையேயும் நல்லுறவை வளர்ப்பது.
- உலகத்தில் பசி, பட்டினி, பஞ்சம், நோய், எழுத்தறிவின்மை முதலியவற்றை நீக்கி, ஒவ்வொருவருடைய உரிமைகளையும், சுதந்திரத்தையும் காக்கப் பாடுபடுவது.

***மேற்கூறியவற்றை அடைய உதவுகின்ற உறுப்பு நாடுகளின் மையமாக இருப்பது.***

# தெரிந்து கொள்ளுங்கள்

## வேதாகமத்திற்கு உள்ளே பிழையற்ற தன்மையின் சான்று

பிழையற்ற தன்மையின் கோட்பாடு எங்கிருந்து வருகிறது? வேத வாக்கியங்களிலிருந்து என்பது இக்கேள்விக்கான பதில். வேதாகமம் தன்னுடைய பிழையற்ற தன்மையைக் குறித்து என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.



**1. வேதவாக்கியங்களின் சாட்சி**

***அ) பழைய ஏற்பாடு :*** *பழைய ஏற்பாட்டில் "என்று கர்த்தர் கூறுகிறார்" போன்ற சொற்றொடர்கள் 3,800 முறைக்கும் மேலான இடங்களில் இடம் பெற்றுள்ளன! பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தாங்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து பேசுவதைக் குறித்து முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தார்கள்!. "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் .... கர்த்தருடைய சாட்சி சத்தியமுமாயிருக்கிறது". (சங்கீதம் 19:7) என்று சங்கீதக்காரன் அறிவிக்கிறான்.* **வேதாகமத்தின் முழுமையான நம்பகத்தன்மைக்கு இது ஒரு நேரிடையான ஆதாரமாகும்.** *"உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம்" (சங். 119:160), "அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள்" (சங்கீதம் 111:7). நீதிமொழிகளும் இதே கருத்தைத் தெரிவிக்கிறது : "தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்" (நீதிமொழிகள் 30:5).*

*"கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார், அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது." (2 சாமுவேல் 23:2) என்று இராஜாவாகிய தாவீது கூறுகிறான். ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் போன்ற மற்ற பல தீர்க்கதரிசிகளும் இதைப் போன்ற கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள்.*

***ஆ) புதிய ஏற்பாடு :*** *புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், தேவன் தங்களுடன் பேசினார் என்ற உண்மைக்கும் சாட்சியளிக்கிறார்கள். சுவிசேஷங்கள் மற்றும் நிருபங்களில் உள்ள பல வேத வாக்கியங்கள் வேதாகமத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துகின்றன (லூக்கா 1:70; எபிரேயர் 4:12; ரோமர் 7:12; யாக்கோபு 4:5).*

*வேதாகமத்தின் போதனை மற்றும் உந்துதலின் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த அனைத்துக் கருத்துக்களையும் நாம் ஆராயும்போது, வேதாகமம் தன்னுடைய சொந்த பிழையற்ற தன்மையைப் போதிக்கிறது என்று திட்டமாக அறிகிறோம். எனவே, வேதவாக்கியங்களை எழுதினவர்கள் தேவனுடைய வார்த்தையைக் குறித்துப் பேசினார்கள். தேவனுடைய வார்த்தையை எழுதினார்கள் என்பது மிகவும் தெளிவாகிறது.*

ஆனால் வேதவாக்கியங்களின் பிழையற்ற தன்மைக்கு மிகப்பெரிய சாட்சிகளில் ஒன்று பின் தொடர்கிறது.

**2. இயேசு கிறிஸ்துவின் சாட்சி.**

தேவ குமாரனாகிய இயேசு, வேதவாக்கியங்களின் முழுமையான தெய்வீக அதிகாரத்திற்கும், நம்பகத்தன்மைக்கும் சாட்சியளித்தார். அவர் குறிப்பாக பழைய ஏற்பாட்டின் நிறைவை பின்வருமாறு உறுதிப்படுத்துகிறார். "மோசேயின் நியாயப் பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே" *(லூக்கா 24:44)*

பரிசேயர்கள் இயேசுவினிடம் தர்க்கித்தபோது, அவர் "வேதவாக்கியம் தவறாதது" (யோவான் 10:35) என்று கூறினார். அவர் வேதவாக்கியத்தின் உண்மை மற்றும் நம்பகத்தன்மையின் அடிப்படையில் போதித்தார்.

"நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் (ஒரு சிறிய எபிரெய எழுத்து) ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் (ஒரு எபிரெய எழுத்தின் சிறிய உறுப்பு) ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். *(மத்தேயு 5: 17, 18)*


குறிப்பாக, இயேசு பல பழைய ஏற்பாட்டு சம்பவங்களையும், நபர்களையும் குறித்துக் கூறினார். தம்முடைய போதனையில் இவைகளைக் குறிப்பிடுவதால் அவைகள் முழுமையாக நம்பத்தக்கவை என்று உறுதிப்படுத்தும் வகையில், இயேசு தம்முடைய ஒப்புதலின் முத்திரையை அவைகளின் மீது பதிக்கிறார். **- Selected**



## வேத அறிவுப்போட்டி எண் 7ல் வெற்றிபெற்றவர்கள்

1. A. கோபிநாத் - செட்டிபாளைம்
2. M. சம்மா - அரக்கோணம்
3. P. பாலகிருஷ்ணன் - செட்டிபாளையம்
4. R. செந்தில்குமார் - செட்டிபாளையம்
5. P. டேவிட்ராஜ் - செட்டிபாளையம்
6. S. லலிதா பிரேம்குமாரி - மதுரை
7. Mr. சிவகுமார் - செட்டிபாளையம்
8. R. பெரியசாமி - செல்லூர்
9. A. கந்தசாமி - தெக்கலூர்
10. A. மேரியம்மாள் - மதுரை
11. M. நோயல்ராஜன் - சேலம்
12. N. டேனியல்தமிழ்வாணன் - மேல்விஷாரம்
13. V. கோவலன் - மதுரை
14. S. கிறிஸ்டியான் - சென்னை
15. N. ஜேக்கப் - கும்மிடிப்பூண்டி
16. D. ரூத்மேரி - தேவம் பேடு
17. K. தேவசகாயம் - தேர்வழி
18. J. நிர்மலாஜான் - மதுரை

# ஒரு வழி




## சாத்தானின் அழிவு
## [Crushing of Satan]
### பாடம் - 10

இயேசு சாத்தானின் தலையை உண்மையிலே எவ்விதம் நசுக்கினார், அதே சமயம் எல்லா மனுஷருக்கும் ஒரு ஆவிக்குரிய ஆசீர்வாதமாக அது எவ்வாறு மாறியது? நாம் இதற்கு பதிலளித்தல் வேண்டும். ஒரு முறை பதிலளிக்கப்பட்டதை நாம் புரிந்து கொண்டு அதாவது கிருபையின் ஆசீர்வாதமாகிய தேவ ஈவுக்குப் பதிலளிக்க வேண்டும்.

### ஆசீர்வாதமானது :
### நமது ஆவிக்குரிய மரணத்திற்கு தேவனுடைய பரிகாரம்

நமது பாவப்பிடியிலிருந்து விடுவிக்கவே இயேசு வந்தார். வேதாகமம், "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; **பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்**" (1 யோவா. 3:8) எனக் கூறுகிறது. ஏனென்றால் நாம் அக்கிரமங்களினாலே ஆவியில் மரித்தவர்களாயிருந்தோம். தேவனோடு மீண்டும் நம்மை இணைக்கும் படிக்கு இயேசு சிலுவையில் மரிப்பதற்கு வந்தார் (1 கொலோ 2:13-15). இதை நடப்பிப்பதில் அவர் சாத்தானின் கிரியையை அழித்தார்.

### ஆசீர்வாதமானது :
### நமது சரீர மரணத்திற்கு தேவனுடைய பரிகாரம்

பாவத்தின் காரியத்தில், இயேசு நமது ஆவிக்குரிய மரணப் பிரச்சனையிலிருந்து மட்டும் விடுவிக்கவில்லை, அவர் நமது சரீர மரணப் பிரச்சனையிலிருந்தும் விடுவித்தார். வேதாகமம், "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும், **ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்**" (எபி. 2:14-15) எனக் கூறுகிறது.

தேவனுக்கு விரோதமான சுய பாவத்தின் விளைவாகிய நமது ஆவிக்குரிய மரணப் பிரச்சனையிலிருந்து விடுவிக்கும்படிக்கு இயேசு

சிலுவையில் மரித்தார் (ஏசா. 59:1-2). மனிதன் தேவனிடத்திற்கு மீண்டும் திரும்பும்படிக்கு அவர் மரித்தார். நாம் வருங்காலத்தில் ஜீவனுக்கென்று உயிர்த்தெழுந்தவர்களாயிருக்க முடியும் என்ற நம்பிக்கையை நமக்குக் கொடுக்கும்படிக்கு அவர் உயிர்த்தெழுந்தார். அவரது உயிர்த்தெழுதலின் மூலம் நமது சரீரமரணப்பிடியிலிருந்து அவர் விடுவித்தார் (1 கொரி. 15 : 20-22).

**A இயேசு பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்தார்.**




இயேசு, பரலோகத்தில் தேவனுடைய குமாரனாக இருந்தார், ஆனால் அவர் "**வானத்திலிருந்து இறங்கி வந்தார்**" (யோவா. 6:51-62). அவர் வாழ்ந்து, ஒவ்வொரு மனிதனைப் போலவும் சோதிக்கப்பட்டார் (எபி. 4:15). அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும் "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் . . . மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலி. 2:7, 2).

**B இயேசு நமது பாவங்களுக்காய் மரித்தார்.**




இயேசு, தேவனுடைய குமாரனாய் அனைத்து மக்களுடைய பாவங்களுக்காய் கல்வாரி சிலுவையின் மேல் அறையப்பட்டார். அவர் "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1 பேது. 2:24). இயேசு நம்மெல்லாருக்காகவும் மரித்தார்! அவரது தியாக மரணத்தின் மூலம், அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிகிற எல்லா மனுஷரும் அவர்களது பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். இது மாபெரும் செய்தி!

இயேசு சிலுவையின் மேல் மரித்ததின் மூலம் சாத்தானின் வல்லமையை அழித்தார். ஏனென்றால் மனுஷர் பாவத்திலிருந்தும், தேவனிடமிருந்து ஆவிக்குரிய பிரிவினை அடைந்ததிலிருந்தும் விடுதலை பெற்றுக் கொள்ளலாம். எப்படியாயினும், இவ்விதமான தியாகத்தை ஏற்படுத்துவதின் மூலம், அவன் அவருடைய குதிங்காலை நசுக்கினான் (ஆதி. 3:15). இவ்விதமாக பாவத்திலிருந்து நாம் தப்புவிக்கப்படும்படிக்கு அவர் நமக்காக சரீரத்தில் சிலுவையின் மீது மரிக்க வேண்டியதாயிற்று.

நாம் மீட்கப்பட்டிருக்கும்படிக்கு இயேசு தமது இரத்தத்தைச் சிந்த வேண்டியிருந்தது. மீட்கப்பட்டிருத்தல் என்பது அவர் நம்மை விலைக்கு வாங்கி, நம்முடைய பாவத்தினால் நம்மை அடிமைப்படுத்தியிருந்த சாத்தானிடமிருந்து, மறுபடியும் நம்மை விடுவித்துக் கொண்டு வருவதாகும். அவருடைய இரத்தஞ்சிந்தப்படுதலின்

மூலமே பாவமன்னிப்பு உண்டாயிருந்தது. வேதாகமம், "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி. 9:22) எனக் கூறுகிறது. ஆனபடியினால், "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1 பேது. 1:18, 19) என பவுல் கிறிஸ்தவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். நமது சுயபாவத்தின் மூலம் நமது வாழ்வில் புகுத்தப்பட்ட ஆவிக்குரிய மரணத்திலிருந்து இயேசு விடுவித்தார் (ரோம. 5:12)

**C இயேசு எழுந்திருக்கும்படிக்கு அடக்கம்பண்ணப்பட்டார்.**


**உயிர்த்தெழுதல்**

சரீர மரணத்தின் பிரச்சனையை ஜெயிக்கும் பொருட்டு, இயேசு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். ஆனபோதிலும் அவருடைய அடக்கத்திற்குப் பின்பு மூன்றாம் நாளிலே, அவர் ஞாயிறு காலையில் மரணத்தினின்று எழுந்தருளி கல்லறையை விட்டு வெளியேறினார் (மாற். 16:9) இயேசு தன் ஜீவனை அடக்கி வைக்க வல்லமையையும் அதிகாரத்தையும் கொண்டிருந்தார். தாமாகவே மரணத்தினின்று எழுந்திருக்கவும் வல்லமையுடையவராக இருந்தார். அவர், "ஒருவனும் அதை (என்னுடைய ஜீவனை) என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என்பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்றார்" (யோவா. 10:18).

நாம், இயேசு மரணத்தினின்று எழுந்தார் என விசுவாசித்தோமானால், பின்பு அந்த நம்பிக்கையானது முடிவிலே நாமும் எழுந்திருப்போம் என்ற நம்முடைய நம்பிக்கையின் மேல் போடப்பட்ட அஸ்திபாரமாக மாறும் (1 தெச. 4:14). உண்மையிலே இயேசு மறுபடியும் வரும் போது, "**பிரேதக்குழியிலுள்ள** அனைவரும் அவரது சத்தத்தைக் கேட்டு, எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா. 5:28, 29). ஆனபோதிலும் யாரெல்லாம் இயேசுவின் மேல் விசுவாசம் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் ஜீவனுக்கென்று உயிர்த்தெழுந்திருப்பார்கள், "கிறிஸ்துவுக்குள்" மாத்திரமே உயிர்த்தெழுதலின் நம்பிக்கை நித்திய ஜீவனுக்கேதுவாக இருக்கிறது (1 கொரி. 15:22). இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது மனிதனுடைய சரீர மரணத்தின் பிரச்சனைக்கு தேவனுடைய பதிலாயிருக்கிறது. இது நற்செய்தியல்லவா!

**D இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளினார்.**




இயேசு அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பரலோகத்திற்கு எழுந்தருளினார். தேவன் இயேசுவை உயிரோடே எழுப்பிய போது தமது பலத்த சத்துவத்தை வெளிப்படுத்தி, "எல்லாத்துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து **எல்லாவற்றையும்** அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி ...... சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே.1:20-22).

இயேசு இப்போது பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார். அவர் நமது பிரதான ஆசாரியராக ஊழியஞ்செய்கிறவருமாயிருக்கிறார். அவர் "பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிற" நம்முடைய பிரதான ஆசாரியராயிருக்கிறார் (எபி. 8:1) ஆனபடியினால், கிறிஸ்தவர்கள் "பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிற நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைப் பெற்றுள்ளனர். நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவா 2:1, 2). நம்முடைய நீதிபரராயிருக்கிறபடியினால், இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக வேண்டுதல் செய்கிறவருமாயிருக்கிறார் (ரோம. 8:34; எபி.7:25). இப்போது அவர் ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், எல்லாவற்றின் மேலும் சகல அதிகாரம் உடையவராயுமிருக்கிறார் (மத். 28:18; 2 தீமோ. 6:15).

**E இயேசு மறுபடியும் வருகின்றார்.**




இயேசு இரண்டாம் முறையாக வருகின்றார் (எபி. 9:28) சரீர மரணமாகிய கடைசி சத்துருவை அழிப்பதற்கு அவர் வருகின்றார். (1கொரி. 15:26) மரணத்திலிருந்து அனைவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் என்றென்றைக்குமாக சரீர மரணத்தை அழிப்பார்" (யோவா. 5:28, 29).

இயேசு உலகத்தை நியாயந்தீர்க்க மறுபடியும் வருகின்றார். இது இயேசுவின் மூலம் பிதாவானவர் எல்லோரையும் நியாயந்தீர்ப்பார். "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" (2 கொரி. 5:10). **நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையும்படி போவார்கள் (மத். 25:46; வெளி 21:4) துன்மார்க்கரோ நீதியுள்ள ஆக்கினையை அடைவார்கள்** (2 தெச. 1:7-9). நாம் அறிந்திருக்கிறபடி

பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் (2 பேது. 3:10-11), அப்பொழுது முடிவு உண்டாகும். குமாரன் எல்லாவற்றையும் பிதாவுக்கு ஒப்புக்கொடுப்பார். "சகலமும் அவருக்குக் (கிறிஸ்துவுக்கு) கீழ்ப்பட்டிருக்கும் போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" (1 கொரி. 15:28).

இயேசு சாத்தானின் கிரியையை ஒவ்வொரு வழியிலும் அழித்துப்போட்டார். அவர் பாவிகளை இரட்சிக்கவும் ஜீவனுக்கேதுவான நலமான வழியை நமக்கு போதிக்கவும் பூமிக்கு வந்தார் (யோவா. 1:29; 10:10). நம்மை பாவத்திலிருந்து மீட்கும்படியாக அவர் சிலுவையின் மீது மரித்தார், இப்படியாக ஆவிக்குரிய மரணத்தினின்று நம்மைக் காக்கிறார். நாம் அவரது கடைசி வருகையில் சரீர மரணத்தினின்று உயிர்த்தெழுந்தவர்களாயிருப்போம் என்பதை நிரூபிக்கவே அவர் மரணத்திலிருந்து உயிரோடே எழுப்பப்பட்டார். இவ்விதமாக சரீர மரணத்தினுடைய சாத்தானின் வல்லமையை அழித்துப் போட்டார்.

மரித்த அனைவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் மரணத்தின் மேலுள்ள தனது வெற்றியை நிறைவேற்றும்படிக்கு இயேசு மறுபடியும் வருகின்றார். இயேசுவுக்கு தம்மை ஒப்புக் கொடுக்காதிருக்கிறவர்களுக்கு இது துக்கமான செய்தியாகும். இயேசு மறுபடியும் வரும் போது கீழ்ப்படியாதவர்கள் நித்திய ஆக்கினையை அடையும் படி எழுந்திருப்பார்கள். நீங்கள் இயேசுவின் கடைசி வருகைக்கு மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறீர்களா? கிறிஸ்தவர்கள் தங்களுடைய விசுவாசத்தினால், "தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருக்கிறார்கள் (2 பேது. 3:12). நீங்கள் காத்திருக்கிறீர்களா?

**தற்சோதனை**

1. _____ பிசாசினுடைய எதை அழிக்கும்படி இயேசு வந்தார்? (A) ஜீவனை (B) கிரியைகளை (C) மரணத்தை
2. _____ இயேசு அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் நம்மை எதிலிருந்து விடுவித்தார்? (A) மரணத்தின் அவசியம் (B) மரணத்தின் வலிமை (C) மரண நிலை
3. _____ இயேசு எங்கிருந்து வந்தார்? (A) பரதீசிலிருந்து (B) வானத்திலிருந்து (C) நரகத்திலிருந்து
4. _____ எதைச் சிந்தாமலிருந்தால் பாவத்திலிருந்து விடுதலை ஏற்பட்டிருக்க முடியாது? (A) இரத்தம் (B) ஜீவன் (C) ஆஸ்தி
5. _____ தன் ஜீவனை ஊற்றும்படிக்கும் அதை திரும்ப பெற்றுக் கொள்ளும் படிக்கும் இயேசு எதை உடையவராகயிருந்தார்? (A) விசுவாசம் (B) நம்பிக்கை (C) வல்லமை
6. _____ இயேசு மீண்டும் வரும் போது யார் உயிர்த்தெழுவார்கள்? (A) நீதிமான்கள் (B) அநீதியுள்ளவர்கள் (C) எல்லா மக்கள்

7. _____ மனிதனுடைய சரீர மரணப் பிரச்சனைக்கு விடையளிக்கும்படிக்கு இயேசு என்ன செய்தார்? (A) போதித்தார் (B) உயிர்த்தெழுந்தார் (C) உபதேசித்தார்

8. _____ மனிதனுடைய எவ்விதமான ஆவிக்குரியப் பிரச்சனைக்கு சிலுவையானது தேவனுடைய பதிலாயிருந்தது? (A) ஆவிக்குரிய மரணம் (B) சரீர மரணம்

9. _____ அவர் தேவனுடைய வலதுப்பாரிசத்தில் அமர்த்தப்பட்டபொழுது இயேசுவின் பாதத்தின் கீழ் எது கிடத்தப்பட்டது? (A) சாத்தான் (B) உலகம் (C) எல்லாம்

10. _____ நமக்காக வழக்காடுவதன் மூலமும் நமது பாவத்திற்கு பரிகாரத்தை ஏற்படுத்துவதன் மூலமும் இயேசு எவ்வாறாக செயல்படுகிறார்? (A) நம்பிக்கையாக (B) நீதிபரராக (C) கர்த்தராக

11. _____ இயேசு அழிக்கப்போகிற கடைசி சத்துரு எதுவாயிருக்கும்? (A) சரீர மரணம் (B) சாத்தான் (C) பிசாசு

12. _____ கடைசி நியாயத் தீர்ப்புக்குப் பின், நீதிமான்கள் .................... க்குள் பிரவேசிப்பார்கள் (A) நரகத்திற்குள் (B) பரதீசிக்குள் (C) பரலோகத்திற்குள்

13. _____ முடிவிலே தேவன் உலகத்தினிடத்தில் என்ன செய்வார்? (A) அழிப்பார் (B) மறுபடியும் உருவாக்குவார் (C) பாதுகாப்பார்

14. _____ இயேசு தம்முடைய கிரியைகளை முடித்தப்பிற்பாடு பிதாவினிடத்தில் என்ன செய்வார்? (A) ஒப்படைப்பார் (B) எல்லாருக்கும் தலையாக தொடர்ந்திருப்பார் (C) எல்லாவற்றிற்கு மேலாக மகிமைப்பட்டிருப்பார்

**ஆம் / இல்லை : சாத்தானை நசுக்குவதற்கு இது இயேசுவினுடைய கிரியையாயிருந்தபடியினால், உன்னுடைய வாழ்விலும் சாத்தான் நசுக்கப்பட்டிருக்கும்படிக்கு நீ இயேசுவினுடையவராய் இருக்க வேண்டுமா?**

**வேதவாசிப்பு : சாத்தான் ஜெயிக்கப்படுதல் : கொலோ. 2:13–23, உயிர்த்தெழுதல் : 1 கொரி 15; 2 கொரி 5:1–8; 1 தெச. 4:12–18**

**வேத ஆராய்ச்சி : இயேசுவின் அதிகாரம் :** மத் : 18; யோவா. 12 : 31; 13 : 3; 16 : 11 ; 17 : 2; எபே. 1 : 20–22; 1 பேது. 3 : 21, **முதல் வருகை :** யோவா. 1 : 1–14 ; 8 : 58 ; 14 : 5, 24 ; 20 : 28 ; ரோம. 9 : 5 ; 2 பேது. 1 : 1 ; 1 யோவா. 5 : 20, **நியாயத் தீர்ப்பு :** யோவா. 12 : 31 ; 2 கொரி. 5 : 10 ; 2 தீமோ. 4 : 1 ; எபி. 9 : 27 ; 1 பேது. 4 : 17 ; நியா. 6, **சிலுவையின் மேல் ஈடுசெய்தல் :** யோவா . 1 : 29 ; 1 கொரி 5 : 3 ; கலா. 1 : 4 ; எபி. 9 : 28, **உயிர்தெழுதல் :** யோவா 5 : 28, 29 ; 11 : 24, 25 ; 1 கொரி. 15 ; 1 தெச. 4 : 13 – 18, **இயேசுவின் மகிமை** அப். 2 : 29–36 ; பிலி. 2 : 5 – 11 ; எபி. 1 : 1–3, **இயேசுவின் ஆசாரி ஊழியம் :** சகரி. 6 : 12, 13 ; எபி. 2 : 17 ; 4 : 14 ; 5 : 16 ; 7 : 11 – 28 ; 9 : 11, **இயேசுவின் ராஜரீகம் :** தானி. 2 : 44 ; 7 : 13, 14 ; சக 6 : 12, 13 ; ரோம. 5 : 17; 1 தீமோ. 1 : 17; 6 : 15 ; வெளி. 19 : 16

**ஜெபங்கள்**

1. அடுத்த மாதம் திருச்சியில் நடைபெற இருக்கும் வாசகர் கருத்தரங்கிற்காக
2. அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் தமிழக சட்டமன்ற தேர்தலுக்காக
3. தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்காக

சிறுவர் பகுதி

# இயேசுவின் சிரசின்மேல் ஊற்றப்பட்ட விலையேறப் பெற்ற தைலம்



**வேதபகுதி : மாற்கு 14:3 – 9**

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு முறை பெத்தானியா என்ற ஊருக்கு சென்று, அங்கு குஷ்டரோகி யாயிருந்த சீமோன் வீட்டிலே பந்தியிருந்தார். நீங்களா இருந்தா ஒரு குஷ்டரோகி வீட்டிலே போய் சாப்பிடுவீர்களா? சாப்பிடமாட்டீங்க! ஆனால் நமது ஆண்டவரோ, 'நான் ஒருவனையும் புறம்பேதள்ளுகிறதில்லை' என்ற வசனத்துக்கு ஏற்ப குஷ்டரோகி வீட்டிலேபந்தியிருந்தார். அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா? ஒரு ஸ்திரீ இயேசுவுக்கு விலையேறப் பெற்ற நளதம் என்ற உத்தமதைலத்தை கொண்டு வந்து அவர் சிரசின்மேல் ஊற்றினாள். அவள் இயேசுவின் மீது எவ்வளவு அன்பு வைத்திருத்தால் மிகவும் விலையேறப்பெற்ற இந்த தைலத்தை ஊற்றியிருப்பாள். ஆனால் அவருடைய சீஷர்களோ! அவளை பாராட்டாமல் இதை "முந்நூறு பணத்துக்கும் அதிகமான கிரயத்துக்கு விற்று தரித்திரருக்கு கொடுத்திருக்கலாமே என்று சொல்லி முறுமுறுத்தார்கள்.

இயேசுவோ அதை அறிந்து அவளை விட்டுவிடுங்கள். ஏன் அவளைத் தொந்தரவு செய்கிறீர்கள். என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறாள். தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள். உங்களுக்கு மனதிருக்கும்போதெல்லாம் அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்யலாம். நானோ, எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன், இவளோ, என்னை அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள் என்றார்.

நாம் எதையாவது இயேசுவுக்காக சிறப்பாக செய்தால் அதை விற்று தரித்திரருக்கு கொடுக்கலாமே என்று சொல்லக்கூடிய ஜனங்கள் இன்றும் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். இல்லையா! பிரியமான தம்பி தங்கைகளே நாமும் ஆண்டவருடைய ராஜ்யத்திற்காக எதை செய்தாலும் அதை சிறப்பானதாக கொடுக்க கற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நமக்கு எத்தனையோ சிறப்பான நன்மைகளை நமது ஆண்டவர் செய்து கொண்டிருக்கின்றார். ஆனால் நம் முற்பிதாக்களோ கண் ஊனமானதைப் பலியிடக் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல, காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறார்கள் என்று

மல்கியா தீர்க்கதரிசி கூறியிருக்கிறார். உங்க அப்பா ஒரு ஒடிந்த கால் பொம்மையை உங்களுக்கு வாங்கி கொடுத்தா அதை சந்தோஷமா ஏற்றுக் கொள்வீங்களா? வாங்க மாட்டீங்க, அப்படித்தானே, நம்மை உண்டாக்கின நம் தேவனுக்கு நாமோ ஆகாதவைகளை கொடுத்தா அது சரியாகுமா? இருக்காது. அப்படியென்றால், நாமும் விலையேறப் பெற்ற தைலத்தை ஆண்டவருக்கு செலுத்தின அந்த ஸ்திரீயைப் போல கொடுக்க கற்றுக் கொள்ள வேண்டும். கொடுப்பீங்களா?

***<u>மனப்பாட வசனம் :</u>***

" ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்"

*(ஆதியாகமம் 4:4)*


## உங்களுடைய ஊழியம் எப்படிப்பட்டது?

| | அல்லது | |
|---|---|---|
| எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசியின் ஊழியத்தைப் போன்றதா? – 2இரா 5:20–27 | | எலியாவைப்பின்பற்றின எலிசாவின் ஊழியத்தைப் போன்றதா? – 2 இரா. 2:1–14 |
| தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போன நாதாப், அபியூவின் ஊழியத்தைப் போன்றதா? – லேவி. 10:1,2 | | தேவ கட்டளைக்கு கீழ்ப்படிந்து, வசனங்களை விவரித்து காண்பித்த ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவின் ஊழியத் தைப் போன்றதா? – அப்.18:24–26 |
| அநீதத்தின் கூலியை விரும்பிய பிலேயாமின் ஊழியத்தைப் போன்றதா? – 2 பேது. 2:15,16 | | இரவும் பகலும் வேலை செய்து சுவிசேஷத்தை அறிவித்த பவுலின் ஊழியத்தைப் போன்றதா? – 1 தெச. 2:9 |
| தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களை எதிர்த்த கோராகு, தாத்தான் அபிராமின் ஊழியத்தைப் போன்றதா? – எண். 16:8–35 | | தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வருக்குப் பின் சென்று தங்கள் ஆஸ்திகளை செலவு செய்த யோவன்னாள், சூசன்னாள் போன்ற மற்ற அநேக ஸ்திரீகளின் ஊழியத்தைப் போன்றதா? – லூக் 8:1–3 |
| இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்த தேமாவின் ஊழியத்தைப் போன்றதா? 2 தீமோ. 4:10 | | அநித்தியமான பாவசந்தோ ஷங்களை வெறுத்த மோசேயின் ஊழியத்தைப் போன்றதா? –எபி. 11:24, 26 |

**சென்ற மாத ஒரு வழி பாடம் –9 ன் விடை**

1.C, 2.A, 3.C,

“தேவன் எதை ஒன்றாக இணைத்திருக்கிறார்”




*- Dillard Thurman*

பொருள் : பிதாவோடும் குமாரனோடும் நமது ஐக்கியம்
ஆக்கியோன் : யோவான் (அப்போஸ்தலன்)
காலம் : கி.பி. 86-90

**திட்டவரைக் குறிப்பு :**

A. குடும்ப ஐக்கியம் பிதா குமாரன் நாம் (அதி 1-3)
B. குடும்ப ஐக்கியம் நாம் - உலகத்தோடு (அதி 4-5)

**சிறப்புச் செய்தி :**

நாம் ஒளியில் நடந்தால்
தேவனுடைய பிள்ளைகளாய் இருப்போம்

**வரலாற்று பின்னணி :**

யோவான் அப்போஸ்தலனின் புகழ்மிக்க புத்தகமிது. தேவன் அன்பாகவேயிருக்கிறார், ஒளியாயிருக்கிறார், ஜீவனாயிருக்கின்றார். அவருடன் நீங்கள் ஒளியில் நடக்க வேண்டும் என்பதே செய்தி.

கற்பனையைக் கைக்கொள்ளாமல் ஒளியில் நடக்க இயலாது. அன்பு செயலில் காண்பிக்கப்படவேண்டும். அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கின்றார்.

யோவானின் பால்ய சிநேகிதரான பாலிகார்பு (Polly Carp) இந்நூலை மிகவும் பயன்படுத்தியதாக தெரிகிறது. மத்திய ஆசியாவில் உள்ள சபைகள் உலகக் கவலையில் மூழ்கி, உபத்திரவத்தில் சிக்கி அன்பில்லா நிலைமையில் இருந்த பொழுது இக்கடிதம் எழுதப்பட்டது.

ஐக்கியத்தின் ஒளியில் நடப்பது அவசியம் 1- 2 அதிகாரம்

ஐக்கியத்தின் அன்பில் நடப்பது அடித்தளம் 3-5 அதிகாரம்

*– Selected*

**வேத அறிவுப் போட்டி எண் 7ன் விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. | சமுத்திரம் | – பிர. 1:7 |
| 2. | நிர்மூடனைக், புத்தியில்லாதவனை | – யோபு. 5:2 |
| 3. | வானத்திலிருந்து | – ரோ. 1:18 |
| 4. | பவுல் | – 1 கொ. 9:18 |
| 5. | முடிசூட்டப்படான் | – 2 தீமோ 2:5 |
| 6. | பிலேமோனுக்கு | – பிலே. 8 |
| 7. | வீணாயிருக்கும் | – யாக். 1:26 |
| 8. | தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும் படிதானே | – மல். 2:15 |
| 9. | கர்த்தர் | – ஆமோ. 5:8 |
| 10 | நீதிமான் | – எசே. 18:9 |

# வேத அறிவுப் போட்டி எண். 8

குறிப்பு :

வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் கீழ்கண்ட கேள்விகளுக்கு வேத வசன ஆதாரத்துடன் விடைகளை இம்மாதம் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் மறக்காமல் எழுதுங்கள். 12 போட்டியில் வெற்றி பெற்று முதலாவது வருபவருக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது. தயவு செய்து உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.

1. பேயோரின் குமாரனாகிய பிலேயாமை பட்டயத்தினால் கொன்று போட்டவர்கள் யார்?
2. கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று சொல்லச் சொன்னவன் யார்?
3. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார் என்று கர்த்தரை துதித்த பெண் யார்?
4. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், யாருடைய சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்?
5. அவர் (கிறிஸ்து) வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு யாரில் நிலைத்திருங்கள்?
6. நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
7. சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே யாரை வஞ்சித்தது என்று பவுல் குறிப்பிடுகிறார்?
8. என் சகோதரர் காட்டாறு போல மோசம் பண்ணுகிறார்கள் என்ற தேவ தாசன் யார்?
9. சிறுமையானவனின் வாழ்க்கையும், எளியவர்களின் நியாயத்தையும் கர்த்தர் விசாரிப்பாரென்று அறிவேன் என்றது யார்?
10. அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் எதற்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்?

## நடப்புச் செய்திகள்

1. *வரும் கோடைக்காலத்தில் குடிநீர் பற்றாக்குறையை தீர்க்க அரசு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.*
2. *வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டால் வரும் சட்டமன்ற தேர்தலில் ஓட்டுப் போடமுடியாது என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சாரங்கி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.*
3. *கிறிஸ்தவ ஜனநாயக முன்னனி தேர்தலில் போட்டியிட முடிவு.*
4. *அமெரிக்காவின் புதிய அரசு இந்தியாமீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை விரைவில் நீக்கும் என்று இந்தியாவிற்கு வருகை தந்த அமெரிக்க பார்லிமெண்ட் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.*
5. *உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான கிளன்மெக்ராத் 67 டெஸ்ட் போட்டிகளில் 339 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆஸ்திரேலிய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறார்.*

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001.
**Editor : B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன்
அழைக்கிறோம்.



ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி
வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி

All are Welcome

**கிறிஸ்துவின் சபை**
17.2.102-D/5, ராஜன் நகர்
வத்தலக்குண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்
✆ : (04543) 23278

Editor
THE WORD OF CHRIST
Post Box No.5,
Batlagundu-624 202.

**Monthly Magazine**

**FOR FREE DISTRIBUTION ONLY**

# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| **HINDI** | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| **ENGLISH** | Friday | 7.45 p.m 8.00 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | J.C. CHOATE |
| **TELUGU** | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| **TAMIL** | Sunday,<br>Tuesday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.30 p.m 5.45 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| **MALAYALAM** | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| **KANNADA** | Sunday | 1.45 p.m 2.00 p.m | 3/5, 7th A Main, Tatasilk Farm<br>Bangalore - 560028 | ROBERT<br>RATHNAKAR |

Please write to these addresses for Bible Correspondence Course,
Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST